முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
அசல் வழக்கு எண். 47/2023

இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மைனவாதி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சாமியப்பன் | கிராமம் | : | கணக்கம்பாளையம் |
| வயது | : | 58 | தாலூக்கா | : | திருப்பூர் |
| நாள் | : | 02-04-2026 | மாவட்டம் | : | திருப்பூர் |

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. அவிநாசி நீதிமன்றத்தில் 141/2024 என்ற வழக்கு எங்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு பூங்கொடி அவரது மகன் ஆகியோரை அடித்ததாக கொடுத்த வழக்கு என்றால் சரிதான். தாவாச் சொத்து ஆதியில் நஞ்சப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நஞ்சப்ப கவுண்டரின் ஒரு வாரிசுகள் தான் வாதிகள் என்றால் சரிதான். நாங்கள் காளியப்ப கவுண்டரின் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. முத்துச்சாமி கவுண்டருக்கு காளியப்ப கவுண்டர், சுப்பண்ண கவுண்டர் என இரண்டு வாரிசுகள் என்றால் சரிதான், நான் காளியப்ப கவுண்டரின் வாரிசு என்றால் சரிதான். கடந்த 1932 ம் ஆண்டு நஞ்சப்ப கவுண்டர் வாரிசுகள் செய்து கொண்ட பாக சாசனத்தின் படி தான் எங்களுக்கு சொத்து பாத்தியம் என்றால் சரிதான். 1932 ம் ஆண்டு ஆவணத்தில் உள்ள உரிமையை அதன் பின்னிட்டு எப்போதும் மாற்ற முடியாது என்றால் சரிதான்,

3. நஞ்சப்ப கவுண்டரின் வாரிசுகள் நால்வரில் ஒருவர் தேசாந்திரம் சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. நஞ்சப்ப கவுண்டரின் தம்பி தான் சென்றுவிட்டார். நஞ்சப்ப கவுண்டரின் மக்கள் சொத்துக்களை அனுபவம் செய்து வந்தபோது ஒருவர்

பாகத்துக்குள் ஒருவர் சென்று வந்தார்கள் கம்பி வேலி எதுவும் போடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 46/1 ஏ, 2 ஏ, 3 ஏ ஆகியவை 1982 ல் இருந்து தடமாக இருந்தது என்றால் சரிதான். 1ம் வாதியும் அவருடன் பிறந்தவர்களும் செய்து கொண்ட பாகப்பிரிவினையில் தடம் பற்றி குறிப்பில்லாததை பயன்படுத்திக் கொண்டு வாதிகளை தாவாச் சொத்து பி செட்யூல் தடத்தை பயன்படுத்த தடை செய்கிறோம் என்றால் அவர்களுக்கு வேறு தடம் உள்ளது.

4. கடந்த 1932 ம் ஆண்டே வாதிகளுக்கு தடபாத்திய உரிமை கிடைத்துவிட்டது அதை நான் தடுக்க முடியாது என்றால் சரியல்ல. மூல ஆவணங்களில் உள்ள உரிமையை அதன்பின்னிட்டு ஏற்படும் ஆவணங்கள் தடை செய்ய முடியாது என்றால் சரியல்ல. வாதிகள் தடத்தை பயன்படுத்துவதை நான் தடை செய்ய முடியாது என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.04.02 16:53:41 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.